(இ) அவற்றுள், தள்ளுபடியில் முடிந்த, தண்டனையில் முடிந்த வழக்குகள் முறையே எத்தனை, தாலூகாவாரியாக ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சபைமுன் விவர அறிக்கை ✲ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. சா. கணேசன் : பதில் 'இன்றுவரை' என்றிருக்கிறது. அது என்று வரை ?

கனம் திரு. பூ. கக்கன் : அங்கத்தினர் அவர்கள் கேள்வி போட்டதற்கு பதில் வருவது வரை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1964-ம் ஆண்டு என்று சொல்லியிருக்கிறது. அதில் தேதி தாளில்லை. தேதி வேண்டுமென்று தனியாகக் கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. மு. கருணாநிதி : பதிவுசெய்யப்பட்ட கொலைகள் பற்றிய விவரம் அளிக்கப்பட்டிருக்கிறது. நடந்த கொலைகள் எவ்வளவு ? குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் போய்விட்ட கொலைகள் எவ்வளவு என்ற விவரத்தைக் கூற முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்.

MR. SPEAKER : The statement placed on the Table shows that it is up to 3rd May 1966.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் சொல்லாவிட்டாலும் கனம் சபாநாயகர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி.

மது விலக்கு வழக்குகள்

* 479 கேள்வி.—**திரு. ஏ. சுவாமிதாஸ் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1965-66-ல் எத்தனை மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) அவ்வழக்குகளால் தண்டனையடைந்த குற்றவாளிகள் எத்தனை பேர் ? ஆண்கள் எத்தனை ? பெண்கள் எத்தனை ?

(உ) 1964-65 ஆண்டைவிட மதுவிலக்கு குற்றவாளிகளின் எண்ணிக்கை கூடியிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா ? எத்தனை சதவீதம் ?

THE HON. SRI P. KAKKAN : (a) 179,058.

(b) 160.727

Males—154,508

Females—6,219.

(c) Increased; 30 per cent.

✲ 575–576-ம் பக்கங்களில் ஒன்பதாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

7th November 1966]

திரு. ஏ. சுவாமிதாஸ் : அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள பதிலில் இருந்து மதுவிலக்கு வழக்குகளின் எண்ணிக்கை ஆண்டு தோறும் கூடிக்கொண்டே போவதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்வதற்கோ அல்லது மது அருந்துவதையும், அவை உற்பத்தி செய்வதையும் குறைப்பதற்கோ தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதிகமாக கேஸ் எடுத்திருக்கிறார்கள். அதற்காக அத்திட்டத்தை ரத்து செய்யவேண்டியதில்லை. அதில் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து அநேக கேஸ்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதனால் எண்ணிக்கை அதிகமாக வந்திருக்கிறதே தவிர அதனால் மதுவிலக்குத் திட்டத்தில் குறைவு இருக்கிறது, அதை கைவிடவேண்டும் என்றில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : 1964-ம் ஆண்டை விட 1965-ம் ஆண்டில் 30 சத விகிதம் மதுவிலக்குக் குற்றங்கள் அதிகரித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இவ்வளவு உயர்ந்த அளவிற்கு அதிகரித்திருப்பதற்குக் காரணம் விஸ்கி, பிராந்தி போன்ற பெரிய மனிதர்கள் சாப்பிடக்கூடிய வஸ்துக்கள் உபயோகிப்பதனால் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றனவா அல்லது ஏழைகள் சாப்பிடுகிற சுண்டிச்சோறு, ஊறல் இவற்றினால் அதிகரித்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : பெரிய மனிதர்கள் செய்த குற்றங்கள், ஏழைகள் செய்த குற்றம் என்ற விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கோ. சி. மணி : இப்போது கடைவீதிகளில் அனுமதிக்கப்பட்டு மதுகாசம் என்ற பானம் வழங்கப்படுகிறது. அதை வாங்கி குடிக்கிறார்கள். அப்படி அதைக் குடித்துவிட்டு வெளியே வந்தவுடன் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு அதற்கு தண்டனை விதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட வழக்குகளும் இதில் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட மதுகாசத்தை பகிரங்கமாக விற்க அனுமதித்ததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : வைத்தியம் காரணமாக சில மருந்துக் கடைகளில் வைத்திருக்கிறார்கள். அதுகூட நல்லதல்ல. அதையும் கட்டுப்படுத்தவேண்டும் என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் விவரத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் என்று காட்டப்பட்டிருப்பதில் பனை ஏறுவதற்கு லைசென்ஸ் எடுத்துக் கொள்ளாத குற்றங்களும் இந்த மதுவிலக்குக் குற்றங்களாகவே காட்டப்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதா ? அப்படியானால்,

அத்தகைய குற்றங்களை, அதாவது லைசென்ஸ் எடுக்காத குற்றங்களுக்கு அவற்றை ஆங்காங்கு வழங்குவதற்கு அதிகாரிகள் இல்லை என்பது கூட காரணமாக இருக்கலாம். இதை எல்லாம் பரிசீலனை செய்து அதற்குத் தனியாக விவரங்கள் காட்ட இனி மேலாவது ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : பரிசீலனை செய்துதான் சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கோசல்ராம் : மதுவிலக்கு விதிகளில் மது கஷாயம் விற்கலாம் என்று சட்டம் அனுமதிக்கிறது. அதை வாங்கி குடித்துவிட்டு வந்தவுடன் அதில் ஆல்கஹால் இருக்கிறது என்று ப்ராசிக்யூட் செய்ய அதிகாரம் இருக்கிறது. ஆகவே, இத்தகைய அனுமதி இருப்பதால் மது கஷாயத்தை விற்பது தவறு என்று அரசாங்கம் விதிகளில் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து அப்படி விற்கலாம் என்றிருப்பதை ரத்து செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அதுபற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அதையும் கட்டுப்படுத்தவேண்டும், தடுக்க வேண்டும் அப்படித் தடுத்தால் மேற்கொண்டு திட்டத்தை நல்ல முறையில் நடத்தமுடியும் என்று மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கோசல்ராம் : நிர்வாக உத்தரவு மூலம் மது கஷாயம் விற்கலாம் என்று போட்டிருக்கிறது. அந்த நிர்வாக உத்தரவை கான்சல் செய்துவிட்டால் அதைத் தடுக்கலாம் என்பது தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : போட்ட உத்தரவை ரத்து செய்துவிட்டால் தடுக்கலாம். இருந்தாலும், சில வைத்தியத்தின் காரணமாக ஏற்கனவே அப்படி செய்திருக்கிறார்கள். அதையும் நிறுத்த **பரிசீலனை** செய்கிறோம். இனிதான் முடிவிற்கு வரவேண்டும்.

Retrenchment of village officials

* 480 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether there is any proposal to have a retrenchment of the services of a number of village officials and staff in Tiruchirappalli district: and

(*b*) if so, the details thereof and the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government have ordered the retrenchment of certain last grade village officers in the district.

(*b*) A total of 94 talayaris and 109 vettis have been ordered to be retrenched. This retrenchment has been ordered with a view to effect economy in expenditure on administration. The orders have been implemented with effect from 1st July 1966.